முருகப்பெருமான் துணை

**மகான் அமர்நீதி நாயனார் அருளிய யோக பிரசன்ன ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

**09.04.2021**, வெள்ளிக்கிழமை

1. கலித்துன்பம் பெருகி நிற்க
கண்ணியமின்றி மக்களிடை
பழிபாவச் செயல்கள் பெருகும்
பகையும் வஞ்சமும் களவும் ஊழலும்
2. ஊழலும் உறவாய் வளரும்
உண்மை மருவும் மிரளும்
வளமிலா இவைநிலை விரட்ட
வள்ளலாய் வந்த அரங்கஞானி
3. ஞானியரின் பெருமை கூறி
ஞாலமதில் யோகபிரசன்ன ஆசி
கனிவுபட அமர்நீதி நாயனாரும்
கண்டுரைப்பேன் சார்வரி சேல்திங்கள்
4. திங்களிலே இருபானேழ்திகதி புகர்வாரம்
(சார்வரி வருடம் பங்குனி மாதம் 27ம் நாள், 09.04.2021 வெள்ளிக்கிழமை)
தேசிகனுக்கு இனிதே உரைப்பேன்
ஓங்காரன் சக்தியாக வந்தஞானியே
ஓங்கார குடில் பலத்தால் தான் மாற்றம்
5. மாற்றமும் நல்ல பாதுகாப்பும்
மண்ணுலகம் அடையப் பெறும்
ஆற்றல் மிக்க உன்சக்தியை
அறிந்து அடைந்தால்தான் உலகம்
6. உலகம் பேரழிவான செயல்களை
உடன்மாற்றி நல்நிலை திரும்பும்
வளமான உன் கொள்கை
வளர்ந்தால் தான் மக்களிடை
7. மக்களிடை தீவினை விலகி
மாண்புள உயர் குணங்களாகி
தேக்கமின்றி ஞானவழித்தேறி
தெரியவரும் பாதுகாப்பான வாழ்வாக
8. ஆகவே மாற்றம் காண்க
ஆபத்தில்லா சமூகம் ஆகிட
யுகத்தார் ஞான வாழ்வுபெற
உடன் அரங்க ஞானி நோக்கி வர
9. வருகவே ஞானிகள் பூசையில்
வல்லமைபட கலந்து வர
தரும வழிகளை கையிலெடுத்து
தடைபடா தொடர்ந்து செய்ய

10. செய்யவே தருமநிலை பெருகி
சிந்தை தெளிவு மாற்றமும்
மெய்ஞான பலமும் உண்டாகி
மேலான மக்களாக சக்தி பெருகிட

11. பெருகிட கலித்துன்பங்கள் ஓடும்
பெருந்தன்மை நிலை கூடியே
ஆறுமுகன் ஞான ஆட்சிக்காலமாகும்
அறிவித்த யோகபிரசன்ன ஆசி முற்றே

–சுபம்–